**கவனிக்க.-** *04.05.2023 ஆந் திகதிய 2331 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2332 - 2023 මැයි මස 12 වැනි සිකුරාදා 2023.05.12

*2332 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு மே மாதம் 12 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (அ) - மாகாண சபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆதன விற்பனைகள் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - | | |
| பதவிகள் - வெற்றிடம் | 520 | | |


**கவனிக்க.-** பாராளுமன்ற வரவு செலவுத்திட்ட அலுவலகம் சட்டமூலம் 2023, ஏப்பிறல் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2023, யூன் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, மே மாதம் 19 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்காணி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

519 - B82454 - 5,403(2022/04)

# பதவிகள் - வெற்றிடம்

## மாகாண அரசாங்க ஆணைக்குழு மேல் மாகாணம்

மேல் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல ஆசிரிய வெற்றிடங்களுக்குக் கல்வியியற் பட்டதாரிகளை இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2023

மேல் மாகாண சபைப் பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரியர் வெற்றிடங்களுக்காக இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு 2 தரம் II இற்குக் கல்வியியற் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்வதற்குத் தகுதியுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

www.psc.wp.gov.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குப் பிரவேசித்து, நிகழ்நிலை முறை ஊடாக விண்ணப்பப்படிவங்களை 2023.05.19 ஆந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைத்தல் வேண்டும் என்பதோடு, சரியாகப் பூர்த்தி செய்து தரவிறக்கம் செய்த விண்ணப்பப்படிவங்களை விண்ணப்பதாரிகளின் ஒப்பத்துடன் மற்றும் ஒப்பத்தை உறுதி செய்து கொண்டதன் பின்னர் 2023.05.19 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு "செயலாளர், ஆட்சேர்ப்புக் கிளை, மேல் மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இலக்கம் 628, 10 ஆவது மாடி, ஜனஜய சிட்டி கட்டிடம், நாவல வீதி, இராஜகிரிய" எனும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். இத் தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவங்களை அனுப்பி வைக்கும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "மேல் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரிய வெற்றிடங்களுக்குக் கல்வியியற் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் - 2023" என விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழிமூலத்தினைக் கட்டாயம் குறிப்பிடல் வேண்டும்.

(உ-ம் - "மேல் மாகாண சபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரிய வெற்றிடங்களுக்குக் கல்வியியற் பட்டதாரிகளை ஆட்சேர்ப்பு செய்தல் - 2023" - புவியியல் - சிங்கள மொழிமூலம்)

குறிப்பு 1:- விண்ணப்பப்படிவமோ அது தொடர்பான ஆவணமோ தபாலில் தொலைந்ததாக செய்யப்படும் முறைப்பாடுகள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது. இறுதித் தினம் வரை தாமதிப்பதனால் ஏற்படக் கூடிய விளைவுகளுக்கு விண்ணப்பதாரிகளே பொறுப்பானவர். அதே போன்று விண்ணப்பப்படிவம் கிடைக்கப்பெற்றமை குறித்து அறிவிக்கப்பட மாட்டாது.

**02. ஆட்சேர்ப்பு முறை :**

2.1 விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலின் 5.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் 5.2 மற்றும் 5.3 இல் குறிப்பிட்டுள்ளவாறு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா என்பதைப் பரீட்சிப்பதற்குப் பொதுவான நேர்முகத்தேர்விற்குத் தோற்றுதல் வேண்டும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரிகள் பொதுவான நேர்முகத்தேர்விலேயே நிராகரிக்கப்படுவர்.

2.2 பொதுவான நேர்முகத்தேர்வில் தகுதி பெறும் விண்ணப்பதாரிகள் தொழிலுக்கு முக்கியமான கற்றல் கற்பித்தல் தொடர்பான திறமையினை அளவிடுவதற்காக இவ்வர்த்தமானி அறிவித்தலின் 9.2 ஆம் பிரிவிற்கமைய செயன்முறைப் பரீட்சையொன்றுக்கு உட்படுத்தப்படுவர். விண்ணப்பதாரி செயன்முறைப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளும் மொத்தப் புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆட்சேர்ப்புக்கள் மேற்கொள்ளப்படும்.

2.3 மாகாண அடிப்படையில் இவ்வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும் என்பதோடு, விண்ணப்பிக்கக் கூடிய தற்போது நிலவும் வெற்றிடங்கள் மற்றும் மொழிமூலங்கள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.

| தொ. இல. | பாடம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|---|---|
| 1 | ஆரம்பக் கல்வி | √ | √ | |
| 2 | பௌத்த சமயம் | √ | √ | |
| 3 | பௌத்த நாகரிகம் | √ | | |
| 4 | இஸ்லாம் | √ | √ | √ |
| 5 | இஸ்லாமிய நாகரிகம் | | √ | |
| 6 | றோமன் கத்தோலிக்கம் | √ | | |
| 7 | கிறிஸ்தவம் | √ | | |
| 8 | கிறிஸ்தவ நாகரிகம் | √ | √ | |
| 9 | இந்து சமயம் | | √ | |
| 10 | இந்து நாகரிகம் | | √ | |
| 11 | சிங்கள மொழி | √ | √ | |
| 12 | இரண்டாம் மொழி சிங்களம் | √ | √ | |
| 13 | ஆங்கில மொழி | √ | √ | √ |
| 14 | தமிழ் மொழி | | √ | |
| 15 | இரண்டாம் மொழி தமிழ் | √ | | √ |
| 16 | குடியுரிமைக் கல்வி மற்றும் சமூக நிர்வாகம் | √ | √ | √ |
| 17 | புவியியல் | √ | √ | √ |
| 18 | கணிதம் | √ | √ | √ |
| 19 | விஞ்ஞானம் | √ | √ | √ |
| 20 | வரலாறு (இந்திய/ஐரோப்பிய/சமகால) | √ | √ | |
| 21 | வரலாறு (க.பொ.த. சா./த.) | | √ | |
| 22 | வணிகமும் கணக்கீட்டுக் கல்வியும் | √ | √ | √ |
| 23 | முயற்சியாண்மைக் கற்கை | √ | | |
| 24 | தகவல் தொடர்பாடல் தொழிநுட்பம் | √ | √ | √ |
| 25 | அரசறிவியல் | √ | √ | √ |
| 26 | பொருளியல் | √ | √ | √ |
| 27 | கணக்கீடு | √ | √ | √ |
| 28 | வணிகக் கல்வி | √ | √ | √ |
| 29 | அளவையியலும் விஞ்ஞான முறையும் | | √ | |
| 30 | மனைப் பொருளியல் | √ | √ | |
| 31 | தொடர்பாடலும் ஊடகக் கற்கையும் | √ | √ | |
| 32 | விவசாயத் தொழில்நுட்பம் | √ | | |
| 33 | உயிரின வளத் தொழில்நுட்பம் | √ | | |
| 34 | செயன்முறைத் தொழில்நுட்பத் திறன்கள் | √ | √ | |
| 35 | இரசாயனவியல் | √ | √ | √ |
| 36 | பௌதிகவியல் | √ | √ | √ |
| 37 | உயிரியல் | √ | | √ |
| 38 | விவசாய விஞ்ஞானம் | | | √ |
| 39 | இணைந்த கணிதம் | √ | √ | √ |
| 40 | உயர் கணிதம் | √ | | |
| 41 | பொறியியல் தொழில்நுட்பவியல் | √ | | |

| தொ. இல. | பாடம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|---|---|
| 42 | உயிர்முறைமைகள் தொழில்நுட்பவியல் | √ | √ | |
| 43 | தொழில்நுட்பவியலுக்கான விஞ்ஞானம் | √ | √ | |
| 44 | மின், இலத்திரனியல் தகவல் தொழில்நுட்பம் | √ | √ | |
| 45 | கட்டுமானத் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | |
| 46 | உள்ளக வடிவமைப்பு | √ | √ | |
| 47 | தரை அழகு வடிவமைப்பு | √ | √ | |
| 48 | மோட்டார் இயந்திர தொழில்நுட்பக் கல்வி | √ | √ | |
| 49 | உலோகக் கட்டுமான தொழில்நுட்பக் கல்வி | √ | √ | |
| 50 | அலுமினிய கட்டுமான தொழில்நுட்பக் கல்வி | √ | √ | |
| 51 | உற்பத்தி | √ | | |
| 52 | பிரயோக தோட்டக் கலைக் கற்கை | √ | | |
| 53 | பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | |
| 54 | கால்நடை உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | |
| 55 | நீர்வளத் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | |
| 56 | அரங்கற் கலை | √ | √ | |
| 57 | நிகழ்ச்சி முகாமை | √ | | |
| 58 | சுற்றுலாத்துறை மற்றும் விருந்தோம்பல் | √ | √ | |
| 59 | உணவு உற்பத்தித் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | |
| 60 | சுகாதாரம், உடற்கல்வி மற்றும் விளையாட்டு | √ | √ | √ |
| 61 | சுகாதாரம் மற்றும் சமூகப் பாதுகாப்பு | √ | | |
| 62 | குழந்தை உளவியல் மற்றும் பாதுகாப்பு | √ | √ | |
| 63 | கணினி வன்பொருள் மற்றும் வடிவமைப்பு (இணைய வடிவமைப்பு மற்றும் மென்பொருள் மேம்பாடு) | √ | √ | |
| 64 | கிரா/பிக் வடிவமைப்பு | √ | √ | |
| 65 | சந்தைப்படுத்தல் | √ | √ | |
| 66 | லொஜிஸ்டிக் | √ | | |
| 67 | கலை மற்றும் கைவினை | √ | √ | |
| 68 | நவநாகரீக வடிவமைப்பு | √ | √ | |
| 69 | ஜவுளி மற்றும் ஆடைத் தொழில்நுட்பக் கல்வி | √ | √ | |
| 70 | இந்தி | √ | | |
| 71 | யப்பான் | √ | | |
| 72 | அரபு | | √ | |
| 73 | சீன | √ | | |
| 74 | கொரியன் | √ | | |
| 75 | பிரெஞ்சு | √ | | |
| 76 | ஜேர்மன் | √ | | √ |
| 77 | சங்கீதம் (கீழைத்தேய) | √ | √ | |
| 78 | நடனம் (சுதேச) | √ | √ | |
| 79 | சங்கீதம் (மேலைத்தேய) | √ | √ | √ |
| 80 | சித்திரம் | √ | √ | |
| 81 | நடனம் (பரதம்) | √ | | |

| தொ. இல. | பாடம் | சிங்களம் | தமிழ் | ஆங்கிலம் |
|---|---|---|---|---|
| 82 | இலக்கிய நயம் (சிங்கள/தமிழ்/ஆங்கில) | √ | √ | √ |
| 83 | இலக்கிய நயம் (அரபு) | √ | √ | |
| 84 | வடிவமைப்பும் நிருமாணத் தொழில்நுட்பவியலும் | √ | | |

**03. சேவை நிபந்தனைகள் :**

i. இந்நியமனம் நிரந்தரமானது. பதவிக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவு தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் கொள்கைத் தீர்மானங்களுக்குக் கட்டுப்படுதல் வேண்டும்.

ii. பதவியுயர்வுகள் மேல் மாகாண ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

iii. விண்ணப்பதாரிகள் தமது பட்டப் படிப்பிற்குரிய விடயங்களின் கீழ் விணணப்பித்தல் வேண்டும் என்பதோடு, நியமனம் வழங்கப்படும் பாடம் எந்தவொரு காரணத்திற்காகவும் மாற்றப்பட மாட்டாது.

மேல் மாகாண கௌரவ ஆளுநரினால் 2017.06.20 ஆந் திகதி அங்கீகரிக்கப்பட்ட மேல் மாகாண ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பு மற்றும் அச் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தங்களுக்கும் அரசாங்க சேவையின் நியமனங்களுக்குரிய பொது நிபந்தனைகளுக்கும் இந்நியமனம் உட்பட்டதாகும்.

**04. சம்பள அளவுத் திட்டம் :**

இப்பதவிக்கு அரசாங்க நிருவாக சுற்று நிருபம் 032016 இன் படி சம்பள அளவு G. E. - 02-2016 இன் ரூபா 33,300 - 495 x 5 - 680 x 5 - 825 x 7 - 1,335 x 20 ரூபா 71,650 (மாதாந்த) சம்பளம் உரித்துடையதாகும். அவர்கள் இச்சம்பள அளவுத்திட்டத்தின் 3 ஆம் படிநிலையாகிய ரூபா. 34,290 இல் நியமிக்கப்படுவர். இதற்கு மேலதிகமாக அரச அலுவலர்களுக்கு அரசினால் காலத்திற்குக் காலம் வழங்கப்படும் வேறு கொடுப்பனவுகளும் உமக்குரித்தாகும்.

**05. கல்வித் தகைமைகள் :**

மேல் மாகாண ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அமைவாகக் கீழ்க் குறிப்பிடப்படும் தகுதிகளைப் பூர்த்தி செய்திருத்தல் அவசியம்.

5.1 பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பட்டம் வழங்கும் நிறுவனமொன்றில் பெற்றுக் கொண்ட கல்வியியல் பட்டம்

மற்றும்

5.2 இலங்கை ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சையில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாத முறையில் தாய்மொழி மற்றும் கணித பாட சித்திகளுடன் 03 திறமைச் சித்திகள் உள்ளடங்கலாக 06 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (ஒரே அமர்வில் ஆகக் குறைந்தது 05 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

மற்றும்

5.3 கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தரப்) பரீட்சையில் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

**06. வயதெல்லை :-**

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொளளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் என்பதோடு, அன்றைய தினத்திற்கு 35 வயதுக்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். மேல் மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவி வகிக்கும் தகைமைகளையுடைய பட்டதாரிகளுக்கு இந்த வயதெல்லை ஏற்புடையதாகாது.

("அதற்கேற்ப 2005.05.19 ஆந் திகதி அல்லது அதற்கு பின்னர் மற்றும் 1988.05.19 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் பிறந்தவர்கள் மாத்திரமே இதற்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர்களாவர்" )

**07. ஏனைய தகைமைகள் :**

i. விண்ணப்பதாரி இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

ii. விண்ணப்பதாரி சிறந்த நடத்தையுடையவராயிருத்தல் வேண்டும்.

iii. சகல விண்ணப்பதாரிகளும் மேல் மாகாணத்தின் எப்பிரதேசத்திலும் சேவையாற்றுவதற்கும் பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமான நல்ல உடல் மற்றும் உள ஆரோக்கியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

iv. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்திற்கு முன்னரான 03 வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக தொடர்ந்து வசிப்பவராயிருத்தல் வேண்டும்.

அல்லது

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தில் விண்ணப்பதாரி மேல் மாகாணத்தில் நிரந்தர வசிப்பாளராக மற்றும் அவரது வாழ்க்கைத்துணையும் அதற்கு முன்னரான 03 வருடங்கள் மேல் மாகாணத்தில் நிரந்தரமாக தொடர்ந்து வசிப்பவராக இருத்தல் வேண்டும்.

v. . இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் தினத்தில், இப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்குரிய அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**08.விண்ணப்பிக்கும் முறை :**

8.1 சகல விண்ணப்பதாரிகளும் www.psc.wp.gov.lk எனும் எமது உத்தியோகபூர்வ இணையத்தளத்திற்குப் பிரவேசித்து ஏற்புடைய தகவல்களை உள்ளடக்கி விண்ணப்பப்படிவத்தைப் பூர்த்தி செய்து விண்ணப்பப்படிவத்தை அனுப்பி வைத்ததன் பின்னர் விண்ணப்பப்படிவத்தைத் தரவிறக்கம் செய்யலாம்.

8.2 முழுமையற்ற வகையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். (விண்ணப்பப்படிவத்தின் பிரதியொன்றைத் தம்வசம் வைத்திருத்தல் பயனுடையதாக அமையும்)

8.3 ஒரு விண்ணப்பதாரி ஒரு விண்ணப்பத்தை மாத்திரமே சமர்ப்பிக்கலாம்.

8.4 விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். ஏதேனுமொரு நிறுவனமொன்றின் விண்ணப்பதாரியின் கையொப்பமானது நிறுவனத் தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினாலும் ஏனைய விண்ணப்பதாரிகளது கையொப்பமானது அரச பாடசாலையொன்றின் அதிபர், பிரதேச கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்த நொத்தாரிசு, முப்படையின் ஆணையதிகாரம் பெற்ற அலுவலர் ரூ.498,960 இற்கு மேலான வருடாந்த அடிப்படைச் சம்பளம் பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை அலுவலர் அல்லது பௌத்த விகாரையொன்றின் விகாராதிபதி அல்லது பிற மத வழிபாட்டுத் தலமொன்றிற்குப் பொறுப்பான அல்லது கருத்தக்க அளவிலான நிலையிலிருக்கும் ஒரு மதகுரு ஆகியோரில் ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

8.5 நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழிமூலம் பின்னர் ஒரு போதும் மாற்றப்பட மாட்டாது என்பதோடு, அது தொடர்பாக செயயப்படும் மேன்முறையீடுகள் கருத்திற் கொள்ளப்பட மாட்டாது.
(நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம் மற்றும் மொழிமூலத்தினை அடிப்படையாகக் கொண்டே நேர்முகத் தேர்வு நடாத்தப்படுவதோடு நியமனம் வழங்கப்படும் என்பதையும் விண்ணப்பிக்கும் போது ஏற்புடைய பாடம் மற்றும் மொழிமூலம் தொடர்பில் கவனம் செலுத்துமாறும் பின்னர் ஒரு போதும் அது மாற்றப்பட மாட்டாது என்பதையும் மேலும் அறியத் தருகிறோம்)

8.6 முழுமையற்ற வகையில் தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பப்படிவங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

**09.நேர்முகத்தேர்வு**

9.1 *பொதுவான நேர்முகத்தேர்வு -*
பொதுவான நேர்முகத்தேர்விற்குப் புள்ளிகள் எதுவும் வழங்கப்பட மாட்டாது.
குறிப்பு 02 - அடைய எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் -
சேவைப்பிரமாணக் குறிப்பு மற்றும் அதற்கமைவாக பிரசுரிக்கப்படும் இவ்வறிவித்தலில் அல்லது பத்திரிகை விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளாரா எனப் பரீட்சித்தல் மற்றும் உடல் தகுதியினைப் பரீட்சித்தல்.

9.2 *செயன்முறைப் பரீட்சை -*
செயன்முறைப் பரீட்சையாக விண்ணப்பதாரியினால் இனங்காணப்படும் ஒரு தலைப்பின் கீழ் செயல் முறை முன்வைப்பு ஒன்றை மேற்கொள்ளல் வேண்டும். அதற்குப் பின்வருமாறு புள்ளிகள் உரித்தாகும்.

| தொடரிலக்கம் | செயன்முறைப் பரீட்சையின் போது புள்ளிகள் வழங்கப்படும் நியமங்கள் | உச்சப் புள்ளிகள் | சித்தியடைவதற்குத் தேவையான ஆகக் குறைந்த புள்ளிகள் |
|---|---|---|---|
| 01 | குறிக்கோள் மற்றும் பிரவேசம் | 05 | 02 |
| 02 | ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு | 05 | 02 |
| 03 | தொடர்பாடல் தெளிவு | 05 | 02 |
| 04 | நேர முகாமைத்துவம் | 05 | 02 |
| 05 | முன்வைத்தல் நுட்பமுறைகளின் பயன்பாடு | 05 | 02 |
| | மொத்தப் புள்ளிகள் | 25 | |

குறிப்பு 03 :- அடைய எதிர்பார்க்கப்படும் நோக்கங்கள் :

ஆசிரியத் தொழிலின் முக்கியமான கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் விணணப்பதாரரின் திறன்களை அளவிடுதல்.

9.2.1 செயன்முறைப் பரீட்சை முறை :

(i) செயன்முறைப் பரீட்சைக்கு ஐந்து (05) நிமிடங்களுக்குக் குறையாத காலம் வழங்கப்படும்.

(ii) செயன்முறைப் பரீட்சையில் பெற்றுக் கொள்ளக்கூடிய அதிகூடிய புள்ளிகள் இருபத்தைந்து (25) ஆகும்.

(iii) செயன்முறைப் பரீட்சையில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு நியமங்கள் தொடர்பாகவும் ஆகக்குறைந்தது 02 புள்ளிகள் வீதம் பெறல் அவசியம்.

(iv) செயன்முறைப் பரீட்சை மதிப்பீடு மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்படும் நேர்முகத் தேர்வுக் குழுவொன்றினால் மேற்கொள்ளப்படும்.

9.2.2 நியமங்களின் குறிக்கோள்கள் :

(i) *குறிக்கோள் மற்றும் பிரவேசம்*

வெற்றிகரமாகப் பாடத்தின் நோக்கத்தினை விளக்குதல் மற்றும் பாடப் பிரவேசம் செய்யும் திறமையினை மதிப்பிடல்.

(ii) *ஆளுமை மற்றும் குரல் கட்டுப்பாடு*

ஒரு ஆசிரியராக சிறந்த ஆளுமையுடன் காணப்படல் மற்றும் கற்பித்தலில் சிறப்பாகக் குரலினைக் கட்டுப்படுத்தும் திறமையினை மதிப்பிடல்

(iii) *தொடர்பாடல் தெளிவு*

கற்றல் கற்பித்தல் நடவடிக்கையில் உரிய விடயங்களை விளைதிறனான முறையில் தெரிவிக்கும் திறமையினை மதிப்பிடல்

(iv) *நேர முகாமைத்துவம்*

வழங்கப்படும் காலப்பகுதியினுள் நோக்கத்தினை அடைந்து கொள்ளும் திறமையினை மதிப்பிடல்.

(v) *முன்வைத்தல் நுட்பமுறைகளின் பயன்பாடு*

நோக்கத்தினை அடைந்து கொள்வதற்காக முன்வைத்தல் நுட்பமுறைகளை சிறப்பாகப் பயன்படுத்தும் திறமையினை மதிப்பிடல்.

**10. விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்கான அறிவுரைகள் :**

விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்கையில் கீழுள்ள அட்டவணை மற்றும் 2.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைப் பயன்படுத்தவும்.

**அட்டவணை 01**

| மொழிமூலம் | குறியீட்டு இலக்கம் |
|---|---|
| சிங்கள மொழிமூலம் | 1 |
| தமிழ் மொழிமூலம் | 2 |
| ஆங்கில மொழிமூலம் | 3 |

11. தற்போது அரசாங்க சேவையிலுள்ள அலுவலர்கள் விண்ணப்பத்தின் 8.0 ஆம் தலைப்பின் கீழ் தமது திணைக்களத் தலைவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட விண்ணப்பத்தினை சமர்ப்பித்தல் கட்டாயமானதாகும்.

12. நேர்முகத்தேர்வுக்குக் குறிப்பிட்ட தினத்தில் சமுகமளிக்காத விண்ணப்பதாரிகள் தொடர்பாக எவ்விதத்திலும் மீள் பரிசீலனை செய்யப்பட மாட்டாது.

13. அவ்வாறே நேர்முகத்தேர்வு தினத்தில் அனைத்து சான்றிதழ்களும் சமர்ப்பிக்கப்படல் அவசியம் என்பதோடு, பின்னர் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு சான்றிதழும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

14. இவ்வறிவித்தலில் உள்ளடக்கப்படாத ஏதேனுமொரு விடயம் இருப்பின் அது தொடர்பான தீர்மானம் மேற்கொள்ளும் உரிமையும், ஏதேனும் வெற்றிடங்களின் பகுதியொன்றை அல்லது அனைத்தையும் நிரப்புதல் அல்லது நிரப்பாமல் விடுதல் தொடர்பாக இறுதித் தீர்மானம் மேற்கொள்ளும் உரிமையும் மேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்குரியதாகும்.

15. இவ்வறிவித்தலின் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளுக்கிடையில் ஏதும் வேறுபாடுகள் ஏற்படின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியிலான அறிவித்தல் சரியானதெனக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

திலக் செனரத்,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு,
மேல் மாகாணம்.

2023, மே 04.

மாதிரி விண்ணப்பப்படிவம்

மேல் மாகாணசபை பாடசாலைகளில் நிலவும் சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல ஆசிரிய வெற்றிடங்களுக்குக் கல்வியியற் பட்டதாரிகளை இலங்கை ஆசிரிய சேவையின் வகுப்பு 2 தரம் II இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் - 2023

Recruitment of Bachelor of Education Graduates to Grade II of Class 2 of the Sri Lanka Teachers' Service for Sinhala, Tamil and English Medium Vacancies existing in Western Provincial Council Schools - 2023

1. தேசிய அடையாள அட்டை இலக்கம் (ஏற்கனவே புகுபதிவு சாளரம் வாயிலாக உள்ளடக்கியிருப்பதால் தற்போது திரையில் தென்படும்)

2. பிறந்த திகதி : [ ] வயது - [ ]

3. மொழிமூலம் : [ ]
சிங்களம் 1
தமிழ் 2
ஆங்கிலம் 3

4. நிரந்தர வதிவிட மாவட்டம் - ☐

கொழும்பு -1
கம்பஹா -2
களுத்துறை -3

5. மேல் மாகாணத்தில் ................. ஆந் திகதியன்று தொடர்ச்சியான நிரந்தர வதிவு வருடங்கள் ☐ மாதங்கள் ☐ நாட்கள் ☐

6. வாழ்க்கைத்துணை மேல் மாகாணத்தில் ............................ ஆம் திகதிக்கு தொடர்ச்சியான நிரந்தர வதிவு

வருடங்கள் ☐ மாதங்கள் ☐ நாட்கள் ☐

7. பிரதேச செயலாளர் பிரிவு : ☐

8. விண்ணப்பிக்கும் பாடம் பந்தி இலக்கம் 2.3 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு (எழுத்துக்களில்)

.................................................................................................................................................

9. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :

.................................................................................................................................................

9.1. முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் ) :

.................................................................................................................................................

9.2. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/தமிழில்) (திரு./திருமதி/செல்வி) :

.................................................................................................................................................

9.3. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் )

.................................................................................................................................................

10. விண்ணப்பதாரியின் நிரந்தர முகவரி : .....................

11. தகவல் வழங்குவதற்காகப் பாவனையிலுள்ள கையடக்கத் தொலைபேசி இலக்கம் - ☐☐☐☐☐☐☐☐☐☐

12. மின்னஞ்சல் முகவரி : ............................................
13. குடியியல் நிலை ..........................................................

14. பால் : ☐

ஆண் -1
பெண் -2

15. கல்வித் தகைமைகள் - க.பொ.த. (சா./தர) பெறுபேறு
க.பொ.த. (சா./தர) பரீட்சை

வருடம் ........... சுட்டிலக்கம் .......................
வருடம் ........... சுட்டிலக்கம் .......................

| பாடம் | தரம் | வருடம் | பாடம் | தரம் | வருடம் |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

16. க.பொ.த. (உ. தர) பெறுபேறு

வருடம் ............................ சுட்டிலக்கம் ............

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

17. உயர் கல்வித் தகைமை பற்றிய விபரங்கள்

17.1 பட்டம் : ..........................................................................................................

17.2 வழங்கிய பல்கலைக்கழகம் : .......................................................................

17.3 பட்டம் செல்லுபடியாகும் திகதி : .......................................................................

17.4 பட்டப் படிப்பில் பயின்ற பிரதான பாடம்/பாடங்கள் : .......................................................................

17.5 பட்டம் பெற்ற மொழிமூலம் : .......................................................................................

(கீழே தரப்பட்டுள்ள பகுதிகளின் தகவல்களை விண்ணப்பதாரி தனது கையெழுத்தில் பூர்த்தி செய்தல் வேண்டும்)

18. விண்ணப்பதாரி அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள போது விண்ணப்பிப்பதாயின்,

18.1 தற்போது வகிக்கும் பதவி : .......................................................................

18.2 அப் பதவிக்கு நியமனம் பெற்ற திகதி : ...............................................................

18.3 நிறுவனத் தலைவரின் பதவிப் பெயர் : ..................................................

18.4 சேவையாற்றும் நிறுவனம் : ....................................................................

18.5 நிறுவனத்தின் முகவரி : ...........................................................................

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவு மற்றும் நம்பிக்கைக்கு ஏற்ப உண்மையானவை எனத் தெரிவிக்கின்றேன். நான் இப்பதவிக்குத் தெரிவு செய்யப்பட்ட பின்னர் தகுதியற்றவர் என அறியவருமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவேன் என நான் அறிவேன். இங்கு குறிப்பிடப்பட்ட எந்தவொரு தகவலையும் பின்னர் மாற்றம் செய்ய மாட்டேன் எனவும் தெரியப்படுத்துகின்றேன்.

முகவரி : ............................................

விண்ணப்பதாரியின் ஒப்பம் : ...............................................

திகதி : .................................................

19. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்

இவ்விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ...................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும் அவர் என் முன்னிலையில் ..................... ஆம் திகதியன்று அவரது கையொப்பத்தை இட்டார் என்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி : ............................

....................................................
கையொப்பத்தினை உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

உறுதிப்படுத்துபவரின் முழுப்பெயர் ................................................................
பதவி ........................................................
முகவரி ........................................................
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

20. விண்ணப்பதாரி அரச அலுவலராயின் நிறுவனத் தலைவரின் சான்றுரை

திரு./திருமதி/செல்வி ............................................................. இன் விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கின்றேன். அவர் இவ்வமைச்சில்/ /இத் திணைக்களத்தில் நிரந்தர/தற்காலிக/அமய ஊழியராகக் கடமையாற்றுகிறார் எனவும், இப்பதவிக்காகத் தெரிவு செய்யப்பட்டால் அவரை விடுவிக்க முடியும் /முடியாது எனவும் தெரியப்படுத்துகின்றேன்.

...............................................................
திணைக்களத் தலைவர் அல்லது அதிகாரம் அளிக்கப்பட்ட
உத்தியோகத்தரின் கையொப்பம்

திகதி .................................
பதவி ................................
அமைச்சு/திணைக்களம் ....................................
(உத்தியோகபூர்வ முத்திரை மூலம் உறுதிப்படுத்தவும்)

05 - 159

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.